

<u>**கொரிய மொழிப் பரீட்சைக்கான பதிவு -2025**</u>

<u>**(உற்பத்தி மற்றும் மீன்பிடித் துறைகள்)**</u>

<u>**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**</u>

**தேர்வு அனுமதி அட்டைகள் வழங்குவது ஆன்லைன் ( Online ) முறையில் 2025.09.15 முதல் 2025.09.17 வரை மட்டுமே நடைபெறும்.**


**தேர்வு விண்ணப்பங்களைப் பெறுவதற்கு நீங்கள் பூர்த்தி செய்து இருக்க வேண்டிய தகைமைகள்:-**

1. 18-39 வயதுக்குள் இருக்க வேண்டும். (1985 செப்டம்பர் 15 முதல் 2007 செப்டம்பர் 14 வரை பிறந்தவராக இருக்க வேண்டும்)
2. எந்த நீதிமன்றத்திலும் வழக்கின் காரணமாக குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு அபராதம், சிறைத் தண்டனை அல்லது கடுமையான தண்டனை பெற்றவராக இருக்கக்கூடாது.
3. கொரிய குடியரசால் நாடு கடத்தப்பட்டவராக அல்லது திருப்பி அனுப்பப்பட்டவராக இருக்கக் கூடாது.
4. நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்ட நபராக இருக்கக்கூடாது.
5. பார்வை குறைபாடு அல்லது நிறக் குறைபாடு இல்லாத நபராக இருக்க வேண்டும்.
6. முதுகுத் தண்டு காயம் உள்ளவராகவோ அல்லது விரல்கள் குறைபாடு அல்லது விரல்கள் அகற்றப்பட்டவராகவோ இருக்கக்கூடாது. (அத்தகைய காயங்கள் குறைப்பாடு உள்ளவர்கள் தேர்வுக்கு அமர வாய்ப்பு கிடைத்தாலும், அவர்கள் தேர்வில் தேர்ச்சி பெற மாட்டார்கள்.)
7. **E-9 விசா வகை மற்றும் E -10 விசா வகை இரண்டின் கீழும் சேவைக் காலம் உட்பட, தென் கொரியாவில் ஐந்து (05) ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருக்கக் கூடாது.**

**தேர்வு விண்ணப்பப் படிவத்தைப் பெற தேவையானவை:-**

தேர்வு விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் வழங்குவதால், பதிவு செய்யும் முன் கீழ்க்காணும் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து, தயார் நிலையில் வைத்திருப்பதை உறுதிசெய்யுங்கள்.

1. **குறைந்தபட்சம் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் புகைப்படப் பக்கத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட JPG புகைப்படம் 1MB இருத்தல் வேண்டும். (இருப்பினும், தேர்வு எழுதும் போது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு கட்டாயமாக இருக்க வேண்டும்.)**
2. கடந்த 03 மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட 3.5 cm x 4.5 cm அளவுள்ள வெள்ளை பின்னணி கொண்ட தெளிவான நிறப் புகைப்படம் JPG வடிவில் இருக்க வேண்டும். (வெள்ளை நிற உடை அணிந்து புகைப்படம் எடுப்பதை தவிர்க்க வேண்டும்)
3. Photo width : 100 -300 pixels
   - File type : Only JPG
   - File Capacity : No more than 15 KB
   - உங்கள் முகம் தெளிவாக தெரியும் வகையில் இருக்க வேண்டும், மேலும் புகைப்படத்தில் எல்லைகள் (border) மற்றும் எழுத்துகள் போன்றவற்றை சேர்க்கக்கூடாது.
   - உடலை நேராக வைத்து புகைப்படம் எடுக்க வேண்டும்.
   - கண்ணாடி அணியாமல் புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.




நிறக் குருடுத்தன்மை, நிறத் தளர்ச்சி கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு தேர்வில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது. தேர்விற்கு பதிவு செய்யும் முன், நீங்கள் நிறக் குறைபாடு இல்லாதவர் என்பதை உறுதிப்படுத்துவது உங்கள் பொறுப்பு ஆகும். (நிறக் குறைபாடு பரிசோதித்து பெற்ற அறிக்கையை தேர்வில் விண்ணப்பிக்கும்போது பதிவேற்றக் கூடாது.)

**நீங்கள் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பின்பு, கொரிய வேலைவாய்ப்பு இணையதளத்தில் பதிவு செய்வதற்கு முன் மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனையின் போது, மீண்டும் நிறக் குருடுத்தன்மை (Color Blindness) பரிசோதனை செய்யப்படும். அந்த நேரத்தில் உங்களிடம் நிறக்குருடுத்தன்மை இருப்பது உறுதி செய்யப்பட்டால், உங்கள் பரீட்சை முடிவு செல்லாது என்று கருதப்படும்.**

4. **தேர்வு விண்ணப்பக் கட்டணம் - அமெரிக்க டொலர் 28க்கு சமமான ரூபாய் (ரூ. 8428.48)**

விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தும் போது, அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியில் உள்ள பின்வரும் கணக்குகளில் ஒன்றிற்கு மட்டுமே பணத்தை வைப்புச் செய்ய வேண்டும்.


- 100-800-44-2461 - தேசிய சேமிப்பு வங்கி (பத்தரமுல்ல கிளை)
- 0000001650 - இலங்கை வங்கி (நிறுவனக் கிளை)
- 208100151791068 - மக்கள் வங்கி (பத்தரமுல்ல கிளை)


தேர்வு அனுமதி அட்டையைப் பெறுவதற்கு கட்டண பற்றுச்சீட்டை பதிவேற்றுவது ( Upload ) **கட்டாயம் என்பதால்**, தயவுசெய்து 2025 செப்டம்பர் மாதம் **11, 12, 15, 16 மற்றும் 17** ஆகிய திகதிகளில் பணம் செலுத்த வேண்டும்.


பணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஸ்கேன் செய்து **(File Size: 1MB)** வைத்திருக்க வேண்டும். **Online / ATM** மூலம் பணம் செலுத்தக் கூடாது.

வங்கி பற்றுச்சீட்டை பூர்த்தி செய்யும் போது கட்டாயமாக உங்கள் பெயர், முகவரி, கடவுச்சீட்டு எண், தேசிய அடையாள அட்டை எண், தொலைபேசி எண் மற்றும் பணம் செலுத்தும் காரணமாக **EPS-TOPIK - 2025** தேர்வு விண்ணப்பக் கட்டணம் என்று குறிப்பிடப்பட வேண்டும். மேலும், உங்கள் கடவுச்சீட்டில் உள்ள கையொப்பம் தெளிவாக இடப்பட வேண்டும். இவ்வாறு காணப்படாத அனைத்து பற்றுச்சீட்டுக்களும் நிராகரிக்கப்படும். எந்தவொரு தகவலும் குறிப்பிடாமல் பணம் செலுத்தப்பட்ட வங்கி பற்றுச்சீட்டுக்களும் நிராகரிக்கப்படும்.

# வங்கி ரசீதுகளை நிரப்புவதற்கான மாதிரி வடிவம்


BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
இலங்கை வங்கி பணம் வைப்புச் சீட்டு Cash Deposit Slip
திகதி / Date: 09 2025
கணக்கு/அட்டை இலக்கம் Account/Card Number: 0000001650
கணக்கு/அட்டை வைத்திருப்பவரின் பெயரும் முகவரியும் : Account/Card Holder's Name and Address : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை
For cash deposits above Rs 200,000 deposited by Person other than A/C Holder/Card Holder
வைப்பவரின் பெயரும் முகவரியும் Depositor's Name and Address: வைப்புச் செய்பவரின் பெயர் மற்றும் முகவரி
தே.அ.அ/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திர இல. NIC/PP/D.L.No: கடவுச் சீட்டு இல
தொலைபேசி இல. Telephone No: தொலைபேசி இல
வைப்பின் நோக்கம் / Purpose of Deposit: EPS - TOPIK - 2025
Ref No.
வைப்புச்செய்பவரின் ஒப்பம் / Depositor's Signature: கடவுச் சீட்டின் கையொப்பத்தை இடுக.
Notes: 5000/-, 2000/-, 1000/-, 500/-, 200/-, 100/-, 50/-, 20/-, 10/-, Coins
Total: 8428.48
Validation checked
Signature


NSB National Savings Bank
பணம் வைப்புச் சீட்டு/Cash Deposit Slip
திகதி/Date: 09 2025
கணக்குரிமையாளர்/கள்/அட்டை உரிமையாளர்/களின் பெயர்/கள்/ Name/s of Account Holder/s/Card Holder/s: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
கணக்கு இல./Account No./Reference No.: 100-800-44-2461
Savings / FD; கடன் அட்டை கட்டணம் Credit Card Payment; பாவனைக் கட்டணப் பட்டியல் Utility Bill Payment; அடகு Pawning; கடன் Loan; ஏனைய Other
Name of the Bank (For Credit Cards Only); Utility Bill Type
தொகை எழுத்தில்/Amount in Words: எட்டாயிரத்து நானூற்று இருபத்தி எட்டு ரூபா நாற்பத்து எட்டு சதம்.
தொகை இலக்கத்தில் /Amount in Figures: Rs. 8428.48
Give the following information for cash deposits above LKR 200,000/- deposited by a person other than the account holder/card holder
பெயர்/Name: வைப்பாளரின் பெயர் மற்றும் முகவரி.
முகவரி/Address
NIC/P.P./D.L. No.: கடவுச் சீட்டு இல
Source of Funds or Purpose of the Deposit: EPS - TOPIK - 2025
தொ.பே.இல/Tel. No: தொலைபேசி இல
For office use only.
Notes: x 5000, x 2000, x 1000, x 500, x 100, x 50, x 20, x 10, Coins
Total: 8428.48
கடவுச்சீட்டின் கையொப்பத்தை இடுக.
வைப்பாளரின் கையொப்பம் Depositor's Signature
Valid if Overprinted or Signed by an Officer
காசாளர்/Teller.



PEOPLE'S BANK
மக்கள் வங்கி
வைப்புச்சீட்டு | Deposit Slip
Office Copy
கணக்கு இலக்கம் Account Number: 208100151791068
திகதி | Date: 09 2025
கணக்குரிமையாளரின் பெயர் Name of Account Holder: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
Give the following information only when a deposit of over Rs. 200,000/- is made by a person other than the Account Holder.
பெயர் Name: பெயரை தெளிவாக எழுதவும்
முகவரி Address: முகவரி
தொலைபேசி இல. Tel. No.: தொலைபேசி இல
தே.அ.அ/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப்பத்திர இல. NIC/P.P./D.L. No.: கடவுச்சீட்டு இல
காரணம் Purpose: EPS - TOPIK - 2025
பண வைப்பாளரின் கையொப்பம் Cash Depositor's Signature: கடவுச் சீட்டின் கையொப்பம்
Notes: x 5000, x 2000, x 1000, x 500, x 200, x 100, x 50, x 20, x 10, Coins
மொத்தம் Total: 8428.48
Valid if Overprinted or Signed by an Officer
Do Not Write Anything Below This Line
Checked by

## தேர்வு விண்ணப்பங்களை நிரப்புவதற்கான வழிமுறைகள்:-

- **படி 1:-**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையதளமான www.slbfe.lk இல் நுழைந்து, Registration for Point System Examination - 2025 (Manufacturing, Fishery) என்ற பகுதியைத் தேர்ந்தெடுத்து, உங்கள் தகவல்களை உள்ளிட வேண்டும்.

இதற்காக, கீழே உள்ள படக்குறிப்பில் காட்டப்பட்டுள்ள அனைத்து தகவல்களுக்கும் தொடர்புடைய தகவல்களையும் Click செய்யவும். (தேர்வு விண்ணப்பத்தை பெற, இங்கே குறிப்பிடப்பட்ட அனைத்து விவரங்களுக்கும் / தகவல்களுக்கும் Click செய்வது கட்டாயம்.)





.

அனைத்து விவரங்கள் / ஒப்புதல்களுக்கு **Click** செய்த பிறகு, **Next** பொத்தானை **Click** செய்யவும்.

- **படி 2:-**


அடுத்த படிக்கு சென்ற பிறகு, கீழே உள்ள படக்குறிப்பின் படி தேசிய அடையாள அட்டை எண்ணை உள்ளிடவும்.




அதன்பிறகு Next பொத்தானை அழுத்தி **Click** செய்யவும்.

- **படி 3:-** கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள படி,
  * உங்கள் தேசிய அடையாள அட்டையின் முன்புற மற்றும் பின்புற புகைப்படங்களை பதிவேற்றவும்.
  * Personal Details கீழ்
    I. கடவுச்சீட்டு பார்கோடில் Barcode குறிப்பிடப்பட்டுள்ளபடி பெயர்.
    II. கடவுச்சீட்டு இலக்கம்
    III. (ஆண் / பெண்)
    IV. பிறந்த திகதி (1985 செப்டம்பர் 15 முதல் 2007 செப்டம்பர் 14 வரை பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்)
    V. கையடக்கத் தொலைபேசி எண் (இதை பின்னர் மாற்ற முடியாது)
    VI. விலாசம்
    VII. மின்னஞ்சல் முகவரி
    VIII. நெருங்கிய உறவினரின் தொலைபேசி எண்
    IX. நகரம்
    X. அருகிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்


**மேற்கண்ட தகவலை உள்ளிடவும்.**




உதாரணமாக, கீழே உள்ள படத்தில் காட்டப்பட்ட படி உங்கள் பெயரை உள்ளிடும் போது, ஆங்கிலப்பெரும் எழுத்துக்களை (Capital Letters) பயன்படுத்தி, கடவுச்சீட்டின் Barcode / MRZ இல் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தில் உள்ளிட வேண்டும்.

**கவனிக்க வேண்டியது-**

உங்கள் பெயரை உள்ளிடும் போது, ஒவ்வொரு பெயரின் முடிவிலும் ஒரு இடைவெளி விட்டு பெயரை உள்ளிட வேண்டும், மேலும் Barcode / MRZ இல் குறிப்பிடப்பட்டுள்ள படி ஒரு எழுத்தை கூட மாற்றாமல் சரியாக உள்ளிடுவது கட்டாயமாகும். (இதற்கு இணங்காத விண்ணப்பங்களை அங்கீகரிப்பதில் ஏற்படும் தாமதத்திற்கு நாங்கள் பொறுப்பல்ல)





மேலுள்ள அனைத்து தகவல்களையும் பூர்த்தி செய்த பிறகு, **Next** பொத்தானை **Click** செய்து தொடரவும்.

**படி 4 :- இப்பொழுது, கீழே கொடுக்கப்பட்ட தகவல்களை உங்களால் உள்ளிட முடியும்.**

உங்கள் புகைப்படம் மற்றும் கடவுச்சீட்டின் புகைப்படப் பக்கத்தின் தெளிவான ஸ்கேன் பிரதிகளை Upload செய்யவும்.

**தயவுசெய்து கவனிக்கவும்** - உங்கள் கடவுச்சீட்டின் பிரதியை ஸ்கேன் செய்யும் போது, Barcode / MRZ முழுமையாக விளங்கும் வகையில் முழு பக்கத்தின் பிரதியையும் ஸ்கேன் செய்ய வேண்டும். இல்லையெனில், உங்கள் தேர்வு விண்ணப்பம் அங்கீகரிக்கப்படாது.




மேலே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள படி, விண்ணப்பதாரரின் புகைப்படம் மற்றும் கடவுச்சீட்டு புகைப்படம் உள்ள பக்கத்தின் தெளிவான ஸ்கேன் பிரதி ஒன்றை **( Upload )** பதிவேற்றவும்.

மேலும், கடவுச்சீட்டு வழங்கப்பட்ட திகதி, கடவுச்சீட்டு செல்லுபடியாகும் முடிவடையும் திகதி மற்றும் தொடர்புடைய வேலை வகையை பதிய வேண்டும்.

உங்களது கடவுச்சீட்டின் வெளியீட்டு திகதி மற்றும் காலாவதி திகதியை (ஆண்டு / மாதம் / நாள்) பதிய வேண்டும்.


பிறகு Next பொத்தானை **Click** செய்து தொடரவும்.

படி 5 :-

கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள படி பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மை மற்றும் சரியானவை என்பதையும், அவை கொரிய மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இணங்குவதையும் உறுதிசெய்து, விண்ணப்பப் படிவத்திற்கான பணம் செலுத்திய திகதி, பணம் செலுத்தப்பட்ட வங்கி மற்றும் உங்கள் கையடக்க தொலைபேசியில் பெறப்பட்ட சரிபார்ப்புக் குறியீடு (OTP / சரிபார்ப்புக் குறியீடு) ஆகியவற்றை உள்ளிடவும்.


**பின்னர், Apply பொத்தானை அழுத்தி உங்கள் விண்ணப்பத்தை எங்களுக்கு சமர்ப்பிக்கவும்.**

**பணம் செலுத்தப்பட்ட திகதியை உள்ளிடவும்.**




விண்ணப்பத்தை சரிபார்த்த பிறகு, உங்கள் விண்ணப்பம் எங்களுக்கு கிடைத்துள்ளதாக உங்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிக்கப்படும். மேலும், விண்ணப்பத்தை பரிசோதித்த பிறகு அதில் உள்ள தகவல்கள் சரியானவை எனில், உங்களுக்குரிய தேர்வு எண் குறுஞ்செய்தி (SMS) மூலம் தெரிவிக்கப்படும்.

அதன்படி, நீங்கள் பெறும் தேர்வு எண்ணைப் பயன்படுத்தி, பணியகத்திற்குத் தெரிவித்த பிறகு விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யது கொள்ள முடியும்.




உங்களால் வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் பிழைகள் இருந்தால், உங்கள் விண்ணப்பப்படிவம் அங்கீகரிக்கப்படாது.

விண்ணப்படிவத்தை அங்கீகரிக்காத காரணத்தை குறிப்பிட்டு, அதைத் திருத்தும்படி எங்களால் உங்களுக்கு குறுந்தகவல் (SMS) அனுப்பப்படும். அந்த குறுந்தகவலில் (SMS) குறிப்பிடப்பட்டுள்ளபடி திருத்தி விண்ணப்பத்தை மீண்டும் சமர்ப்பிக்க வேண்டும்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும் மேலே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி தேர்விற்கு பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

இணைப்பு 01

## <மதனிப்பட்ட தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்துவதற்கான ஒப்புதல்>

| | |
|---|---|
| நோக்கம் | EPS-TOPIK தொடர்பாக விண்ணப்பதாரரின் அடையாளத்தைச் சரிபார்க்கவும், தொழில் தேடுபவர் பட்டியலைப் பதிவு செய்யவும், கொரியாவில் அவர்கள் தங்கியிருப்பதை நிர்வகிக்கவும் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டு செயலாக்கப்படுகின்றன. |
| சேகரிக்கப்பட்ட தகவல்கள் | புகைப்படம், பெயர், பிறந்த திகதி, பாலினம், பாஸ்போர்ட் எண், தொடர்புத் தகவல், விண்ணப்ப எண் |
| தக்கவைப்பு காலம் | **EPS-TOPIK மற்றும் தொடர்புடைய நிர்வாக செயல்முறை (அரை நிரந்தர) முடியும் வரை** |
| விண்ணப்பதாரர்களின் உரிமைகள் | தனிப்பட்ட தகவல்களைச் சேகரிப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் சம்மதத்தை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு. இருப்பினும், மறுப்பது சோதனைக்கு விண்ணப்பிப்பதில் வரம்புகள் அல்லது பாதகங்களை ஏற்படுத்தக்கூடும். |

## <மூன்றாம் தரப்பினருக்கு தனிப்பட்ட தகவல்களை வழங்குதல்>

EPS-TOPIK-க்கு விண்ணப்பிப்பது என்பது, [வெளிநாட்டுத் தொழிலாளியின் வேலைவாய்ப்பு தொடர்பான சட்டம், முதலியன] பிரிவு 7 மற்றும் அதே சட்டத்தின் அமுளாக்க ஆணையின் பிரிவு 13 மற்றும் 31-2 (தனித்துவமான அடையாளத் தகவலைச் செயலாக்குவது தொடர்பாக) ஆகியவற்றின் அடிப்படையில் சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்கள், வேலை தேடுபவர் பட்டியலைத் தேர்வு செய்தல் மற்றும் பதிவு செய்தல் போன்ற நோக்கங்களுக்காக, பின்வரும் நிறுவனங்களால் செயலாக்கப்பட்டுப் பயன்படுத்தப்படலாம் என்பதாகும். இந்த ஏற்பாட்டிற்கான ஒப்புதலை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு; இருப்பினும், நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்றால், EPS-TOPIK-ஐப் பயன்படுத்த முடியாது.

| நிறுவனம் | வழங்கப்பட்ட தகவல் | தக்கவைப்பு காலம் | நோக்கம் |
|---|---|---|---|
| **கொரிய வேலைவாய்ப்பு தகவல் சேவை** | புகைப்படம், பெயர், பிறந்த திகதி, பாலினம், கடவுச்சீட்டுஇலக்கம், தொடர்பு எண், விண்ணப்ப எண் | **அரை நிரந்தரம்** | **வேலை தேடுபவர் பட்டியலைப் பதிவு செய்வதற்கும், வேலைவாய்ப்பு அனுமதிகள் மற்றும் தொழிலாளர் ஒப்பந்த நடைமுறைகள் போன்ற நிர்வாகப் பணிகளைக் கையாளுவதற்கும்.** |
| **அனுப்பும் நாட்டிலுள்ள கொரிய தூதரகம் மற்றும்அனுப்பும் நாட்டுக்கு கொரியாவில் உள்ள தூதரகம்** | | | **நாடு வாரியாக அனுப்புதல் மற்றும் அறிமுகப்படுத்துதல் நிலையைக் கண்காணித்தல், சட்டவிரோத தங்குதலை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை நிறுவுதல் போன்ற நிர்வாகப் பணிகளைக் கையாளுதல்.** |
| **குடிவரவு அலுவலகம்** | | | **CCVI வழங்குவதற்கு விண்ணப்பிப்பது போன்ற பணிகளைச் செயல்படுத்த** |

## <தனித்துவமான அடையாளத் தகவலைச் செயலாக்குதல்>

| தகவல்கள் | தக்கவைப்பு காலம் | நோக்கம் | விண்ணப்பதாரர்களின் உரிமைகள் |
|---|---|---|---|
| **கடவுச்சீட்டு இலக்கம்** | **அரை நிரந்தரம்** | EPS-TOPIK-ஐ நடத்துவதற்கும், தொடர்புடைய சட்டங்களின்படி வேலை தேடுபவர் பட்டியலைத் தொகுப்பதற்கும் தனித்துவமான அடையாளத் தகவல்களைச் சேகரித்து செயலாக்குதல். | விண்ணப்பதாரர்கள் தனிப்பட்ட அடையாளத் தகவல்களைச் சேகரிப்பதை மறுக்க உரிமை உண்டு. இருப்பினும், அவர்கள் அதை வழங்க மறுத்தால், பரீட்சைக்கு அவர்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாமல் போகலாம். |

## <தனிப்பட்ட தகவல் கையாளுதலைப் பகிர்ந்தளித்தல்>

EPS-TOPIK விண்ணப்பங்களை திறம்பட நிர்வகிக்க, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் அமைச்சு புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) மற்றும் சேவை உறுதி ஒப்பந்தம் (SCA) ஆகியவற்றின் அடிப்படையில் தனிப்பட்ட தகவல்களை ஒப்படைக்கலாம்.

| நிறுவனம் | வழங்கப்பட்ட தகவல்கள் | தக்கவைப்பு காலம் | நோக்கம் |
|---|---|---|---|
| **EPS அனுப்பும் முகவர்** | புகைப்படம், பெயர், பிறந்த திகதி, பாலினம், கடவுச்சிட்டு இலக்கம், தொடர்பு எண், விண்ணப்ப இலக்கம் | **தொடர்புடைய EPS-TOPIK இன் சோதனை விண்ணப்பக் காலத்தில்** | **EPS-TOPIK விண்ணப்பம், அடையாள சரிபார்ப்பு மற்றும் தொடர்புடைய ஆதரவு பணிகளுக்காக** |